# 19

# மனந்திரும்புதல்

*சில வேளைகளில், நமது ஆவிக்குரிய மதிப்பீடுகளைத் தீர்மானிப் பதற்கு, நாம் இருக்கும் சூழ்நிலைகளை நாம் அனுமதிக்கின்றோம். லூக்கா 16ல் ஐசுவரியவான், லாசரு ஆகியோரைப் பற்றிக் கூறும் மறக்க முடியாத ஒரு காட்சியானது, இது எவ்விதம் உண்மை என்பதை விளக்குகின்றது. ஐசுவரியவான் இந்த வாழ்க்கையில் மற்றவர்களைப் பற்றிய எண்ணமில்லாமலும், உறுதியாகவே, தனது ஆவிக்குரிய தேவைகளைப் பற்றிய எண்ணம் கூட இல்லாமலும் இருந்தான். தனது சொந்தமான சுயநல விருப்பங்கள் மற்றும் நோக்கங்களால் ஆன சிறு உலகத்துடனேயே அவனது அக்கறைகள் எல்லாம் வரையறைப் பட்டிருந்தன. மரணத்தின்போது, அவன் தனது செயல்களின் விளைவு களை எதிர்நோக்கி நித்தியத்திற்குச் சென்றான். அவன் ஆடம்பரத் திலிருந்து, ஆவிக்குரிய உலகத்தில் வேதனையுள்ள இடத்திற்குச் சென்றான். லூக். 16:23ல் இது பாதாளம் என்று அழைக்கப்படுகின்றது.*

*மரணத்திற்குப் பிறகு, அவனது முன்னுரிமைகள் முற்றிலுமாக மாறுபட்டன. மற்ற எல்லா முக்கியத்துவங்களும் மங்கின. அவனிடம் இரண்டு குறிப்பிடத்தக்க எண்ணங்கள் மேலோங்கின: முதலாவது (ஒருவேளை முதல்முறையாக) அவன் தனது ஆத்துமாவைப் பற்றிக் கவலைப்பட்டான். அவன் இரக்கம் மற்றும் கிருபைக்காக மன்றா டினான். அப்பொழுது அவன்: "தகப்பனாகிய ஆபிரகாமே, நீர் எனக்கு இரங்கி, லாசரு தன் விரலின் நுனியைத் தண்ணீரில் தோய்த்து, என் நாவைக் குளிரப் பண்ணும்படி அவனை அனுப்ப வேண்டும்; இந்த அக்கினி ஜுவாலையில் வேதனைப்படுகிறேனே என்று கூப்பிட்டான்" (லூக். 16:24) என்று இயேசு கூறினார்.*

*இரண்டாவது, அவன் தனது சகோதரர்களின் ஆவிக்குரிய நிலை*

*பற்றிக் கவலையுடன் குரல் எழுப்பினான். இது அவன் தனது வாழ்க்கையிலே முதன் முறையாக தனது சகோதரர்களின்மேல் ஆவிக்குரிய அன்பை வார்த்தைகளில் வெளியிட்டதாக இருந்திருக்கும். சில கணங்கள் வேதனையானது அவனுடைய இருதயத்தில் ஊழிய வாஞ்சையைக் கொடுத்தது. அவன் பின்வருமாறு வேண்டுகோள் விடுத்தான்:*

> *அப்பொழுது அவன்: அப்படியானால், தகப்பனே. எனக்கு ஐந்து பேர் சகோதரருண்டு, அவர்களும் வேதனையுள்ள இந்த இடத்துக்கு வராதபடி, அவன் போய் அவர்களுக்குச் சாட்சியாக அறிவிக்கும் பொருட்டு, நீர் அவனை என் தகப்பன் வீட்டுக்கு அனுப்பும்படி உம்மை வேண்டிக் கொள்ளுகிறேன் என்றான் (லூக். 16:27, 28).*

*அவன் சகோதரர்கள், மற்ற ஒவ்வொருவரையும் போலவே நியாயப்பிரமாணத்தையும், தீர்க்கதரிசனங்களையும் படிக்க வேண்டும் என்று அவனுக்குக் கூறப்பட்டபோது, அவன், ''அப்படியல்ல, தகப்பனாகிய ஆபிரகாமே, மரித்தோரிலிருந்து ஒருவன் அவர்களிடத்திற்குப் போனால், மனந்திரும்புவார்கள்'' (லூக். 16:30) என்று வேண்டுகோள் விடுத்தான். ''மனந்திரும்புதல்'' என்ற வார்த்தை அப்பொழுதுதான் முதன்முறையாக அவனால் பேசப்பட்டிருந்ததோ? மரணமானது அவனது சிந்தனைகளையும் ஆர்வங்களையும் திசை திருப்பியிருந்தது! அவனுடைய சகோதரர்களுக்கு மறுரூபமாக்கும் மனந்திரும்புதல் தேவை என்பதை அவன் அறிந்தான்!*

*வாழ்க்கையின் மிகப்பெரிய விஷயம் மனந்திரும்புதலே என்பதைக் காலமும் நித்தியமும் நமக்கு உணர்த்தும்! மரணமானது நம்மை வலிவுடன் தாக்கும் வரையிலும் நாம் இந்த உணர்வடைதலுக்குக் காத்திருக்க வேண்டாமே! இயேசு, "நீங்கள் மனந்திரும்பாற்போனால் எல்லாரும் அப்படியே கெட்டுப்போவீர்கள்" (லூக். 13:3, 5) என்று கூறினார். பவுல், அத்தேனே பட்டணத்தாருக்கு அறிவித்த அறிவிப்பில், மனந்திரும்பும் கட்டளைக்கு எதிராக உள்ள எல்லா ஆட்சேபனைகளையும் புறம்பே தள்ளினார்: ''அறியாமையுள்ள காலங்களைத் தேவன் காணாதவர் போலிருந்தார் இப்பொழுதோ மனந்திரும்ப வேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார்'' (அப். 17:30). தேவனுக்கு முன்பாக, மனித*

குலத்தில் இருப்பவர்கள் பின்வரும் இரண்டு சாலைகளில் ஏதாவ தொன்றில் பயணம் செய்கின்றார்கள்: மனந்திரும்புதலின் வழி அல்லது கலகத்தின் வழி. இயேசுவின் வருகையை தேவன் தாமதப்படுத்து வதற்கான ஒரே காரணம்-மனிதர்கள் மனந்திரும்புவதற்கு இன்னும் அதிக காலத்தை அனுமதிப்பதற்காகவே: "தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி, கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக் குறித்துத் தாமத மாயிராமல்; ஒருவரும் கெட்டுப் போகாமல், எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவரா யிருக்கிறார்" (2 பேது. 3:9). ஒவ்வொரு மனிதரும் மனந்திரும்பு கின்றாரா இல்லையா என்பதிலேயே அவரது நித்திய அடைவிடம் ஊசலாடுகின்றது: "பயப்படுகிறவர்களும், அவிசுவாசிகளும், அருவருப் பானவர்களும், கொலை பாதகரும், விபசாரக்காரரும், சூனியக் காரரும், விக்கிரகாராதனைக்காரரும், பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள்" (வெளி. 21:8).

புதிய ஏற்பாட்டின் மனந்திரும்புதலுக்கான அழைப்பிற்குப் பதில் கொடுத்திருக்கின்றவர்களால் அமையப் பெற்றுள்ளதே சபையாகும். கிறிஸ்தவர்கள், கர்த்தருடைய நாமத்தைச் சொல்லி அநியாயத்தை விட்டு விலகியிருக்கின்றவர்கள் ஆவார்கள் (2 தீமோ. 2:19). கிறிஸ்துவுக்குள் மனம் மாறியதன் மூலம் அவர்கள் இருளின் அதிகாரத் தினின்று விடுதலையாகி, தேவனுடைய குமாரனின் இராஜ்யத்திற்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றார்கள் (கொலோ. 1:13). அவர்கள் தேவனு டைய பிள்ளைகளாக வாழ்வதற்குத் தங்களை ஒப்புக் கொடுத்து, அறியாமை மற்றும் கீழ்ப்படியாமையில் முன்பு வாழ்ந்திருந்த இச்சைகளுக்குத் திரும்பிப் போக மறுக்கின்றார்கள் (1 பேது. 1:14). தங்களை அழைத்தவரைப் போல் இருப்பதே அவர்களின் விருப்பமா யிருக்கின்றது. தங்களின் எல்லா நடக்கைகளிலும் அவரைப் போலிருப் பதற்கு அவர்கள் கடும் முயற்சியை மேற்கொண்டு, கர்த்தருடைய விருப்பத்தைத் தங்கள் நடக்கைகள் எல்லாவற்றிலும் ஒப்புக் கொண்டு இருக்கின்றார்கள்: "நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தரா யிருங்கள்" (1 பேது. 1:16).

ஆகையால், கிறிஸ்தவராயிருப்பதற்கு, கர்த்தரின் சபையில் உறுப்பினராயிருப்பதற்கு முயற்சிக்கின்ற எவரொருவருக்கும், மனந்திரும்புதல் என்பது மூலைக்கல் போன்ற வார்த்தையாகவும், பிரதான நடக்கையாகவும் இருக்கின்றது. இந்த வார்த்தையின்

அடிப்படை அர்த்தம் மற்றும் மறைமுகமான அர்த்தம் ஆகியவற்றில் சபையின் இயல்பு பிரதிபலிக்கின்றது. தேவன் தமது சபைக்கு அழைக்கும் மக்களின் விசேஷத் தகுதியாக மனந்திரும்புதல் விளங்குகின்றது: சபையானது, மனந்திரும்புகின்றவர்களைக் கொண்டதாக இருக்கின்றது. கொர்நேலியுவின் வீட்டில் புறஜாதியார் ஞானஸ்நானப்படுத்தப்பட்டதைப் பற்றி எருசலேமில் யூத கிறிஸ்தவர்களுக்குப் பேதுரு விளக்கமளித்தபோது, யூத சகோதரர்கள், "அப்படியானால் ஜீவனுக்கேதுவான மனந்திரும்புதலைத் தேவன் புறஜாதியாருக்கும் அருளிச் செய்தார்" (அப். 11:18) என்று பதில் கூறினார்கள். உண்மையான ஜீவனின் கதவானது, உண்மையாக மனந்திரும்புகின்றதினாலேயே திறக்கப்படுகின்றது என்பது அவர்களுக்குத் தெளிவாய் இருந்தது, நமக்கும் இது தெளிவாய் இருக்க வேண்டும்.

மனந்திரும்புதல் என்றால் என்ன? அது என்ன, அது எதை அர்த்தப்படுத்துகின்றது என்பது பற்றி தவறு எதுவும் இல்லாதபடிக்கு இந்த வார்த்தையை இன்னும் சற்று விளக்கமாக வர்ணிப்போம். இதை விளக்கப்படுத்துவதற்கு நாம் சவுலின் மனமாற்றப் பின்னணியைப் பயன்படுத்துவோம்.

## பாவத்திலிருந்து திரும்புதல்

முதலாவதாக, மனந்திரும்புதல் என்பது பாவத்திலிருந்து திரும்பி, துன்மார்க்கத்திலிருந்து திசை மாறுவதாக இருக்கின்றது.

மனந்திரும்புதல் என்பது, தனிப்பட்ட முன்னேற்றத்தைக் காட்டிலும் மேலானதாக, ஒருவர் தமது வாழ்க்கையைக் கட்டுப் பாட்டுடன் கொண்டு செல்வதைக் காட்டிலும் மேலானதாக இருக்கின்றது. தேவனுக்குப் புறம்பாயிருக்கின்ற எல்லாவற்றையும் கை விடுவதற்கான ஆழமான ஒரு முடிவாக இது இருக்கின்றது. இந்த முடிவே, புதிய பிறப்பு (யோவா. 3:3) என்று இயேசு அழைக்கும் செய லுக்கு மாறுபாடுகளைப் பங்களிப்பதாக இருக்கின்றது.

மனந்திரும்புதல் என்பது, ஒருவர் தாம் செய்துள்ள பாவங் களுக்காக வருந்துவது மட்டுமல்ல. பாவமானது ஒருவரைச் சங்கடத்தில் ஆழ்த்தும்போது அல்லது பாவத்திற்காக ஒரு தண்டத்தைச் செலுத்தும் போது ஒருவர் வருத்தப்படக் கூடும். யூதாஸ் தான் இயேசுவைக் காட்டிக் கொடுத்ததற்காக வருந்தினான், ஆனால் அவன்

மனந்திரும்பவில்லை (மத். 27:3). கிறிஸ்துவை மறுதலித்த பேதுரு (மத். 26:34, 69-75) மனந்திரும்பினார்; யூதாஸ் வெறுமனே மனஸ்தாபப் பட்டான். ஒருவர் தாம் பாவம் செய்து விட்டதாக ஆழ்ந்து வருத்தப்பட்டும், மனந்திரும்பாமலே போகக் கூடும்.

மனந்திரும்புதல் என்பது பாவத்தை உணருதல் மட்டுமல்ல. பெந்தெகொஸ்தே நாளன்று, பேதுரு, தமது உரையைக் கேட்டுக் கொண்டிருந்த யூதர்களின் பாவங்களைச் சுட்டிக் காட்டினார். அவரது வார்த்தைகள் அவர்களுடைய இருதயங்களுக்கு உணர்த்துதலைக் கொண்டு வந்தது, அவர்கள் "நாங்கள் என்ன செய்ய வேண்டும்?" (அப். 2:37) என்று கதறினார்கள். ஆயினும், அவர்களின் உணர்த்தலைப் பேதுரு மனந்திரும்புதல் என்று கருதவில்லை; ஏனென்றால் அவர்களின் கேள்விக்கான தமது பதிலில் பேதுரு, "நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொரு வரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்" (அப். 2:38) என்று கூறினார்.

மனந்திரும்புதல் என்பது தேவனுக்கேற்ற துக்கம் மட்டுமல்ல. பாவங்களுக்காக, தேவனுக்கேற்ற துக்கமானது மனந்திரும்புதலுக்கு முன்னானதாகவும், மனந்திரும்புதலை உண்டாக்குவதாகவும் இருக்கின்றது. பவுல்,

> தேவனுக்கேற்ற துக்கம் பின்பு மனஸ்தாபப்படுகிறதற்கு இடமில்லாமல் இரட்சிப்புக்கேதுவான மனந்திரும்புதலை உண்டாக்குகிறது; லௌகிக துக்கமோ மரணத்தை உண்டாக்குகிறது (2 கொரி. 7:10) என்று எழுதினார்.

தேவனுக்கேற்ற துக்கம் என்பது மனந்திரும்பும் செயல் முறையின் ஒரு பாகமாக இருக்கின்றதே தவிர, அதுவே மனந்திரும்புதலாகி விடாது.

வாழ்க்கையின் ஒரு மறுசீரமைப்பே மனந்திரும்புதல் என்று கூட விளக்கப்படுத்த முடியாது. மாறாக மனந்திரும்புதலானது வாழ்க்கை யில் ஒரு மறுசீரமைப்பை உண்டாக்குவதாக இருக்கின்றது. மனந் திரும்புதலானது வாழ்க்கையில் ஒரு மாற்றத்தை விளைவிக்கவில்லை யென்றால், அது உண்மையான மனந்திரும்புதலாகி விடாது. யோவான்ஸ்நானன் தன்னிடத்தில் வந்த மக்களை, "மனந்திரும்புதலுக் கேற்ற கனிகளைக் கொடுங்கள்" (மத். 3:8) என்று வற்புறுத்தினார். உண்மையான மனந்திரும்புதல் என்பது மனந்திரும்புதலுக்கேற்ற கனி

களுக்கு, ஒரு மாறுதலுள்ள வாழ்வுக்கு முந்தியதாக இருக்கின்றது.

மனந்திரும்புதல் என்பது பாவத்தைப் பற்றிய ஒருவரது சித்தத்தில் செய்யப்பட வேண்டிய தீர்மானமுள்ள ஒரு மாற்றமாகும். இது அறிவுடைமை, உணர்வுகள் மற்றும் மனசாட்சி ஆகியவை ஈடுபடக் கூடியதாகும். பாவத்தைப் பற்றிய இந்த மனநிலையானது ஒரு நபர், தாம் வாழும் வழிகளை விட்டுவிடக் கூடிய வகையில் மனித ஆளுமைத் தன்மையில் புரிந்து கொள்ளக் கூடியதாக இருக்கின்றது. ஞானஸ்நானத்தில், ஒருவர் தமது பாவத்திற்கென்று மரித்து மூழ்கடிக்கப்பட்டு, தனது பழைய சுபாவத்தைச் சிலுவையிலறைந்து, அவரது பாவ சரீரமானது அழிக்கப்படும்படியாகச் செய்ய முடியும் (ரோமர் 6:6).

மனந்திரும்புதலின் இந்த அர்த்தமானது சவுலின் மனமாற்றத்தில் காணப்பட முடியும். தர்சுப் பட்டணத்தானாகிய சவுல் ஒரு பரிசேயராகவும், எபிரெயரில் பிறந்த ஒரு எபிரெயராகவும் இருந்தார் (பிலி. 3:5), அவர் மோசேயின் பிரமாணத்தின்படிக் குற்றஞ் சாட்டப் படாதவராயிருந்தார் (பிலி. 3:6). வேறு வார்த்தைகளில் சொல்லுவதென்றால், அவர் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளத் தவறி விட்டதாக அவருக்கெதிராகச் சட்ட ரீதியான குற்றச்சாட்டெதுவும் கொண்டு வரப்பட முடியாதிருந்தது. பரிசேயர்-யூத மார்க்கத்திலேயே மிக உயர்ந்த நிலையில் இருந்த யூதர் - என்ற வகையில், சவுல், இயேசு ஒரு எத்தர் என்றும், யூத மார்க்கத்தை அழிக்க விரும்பினார் என்றும் நம்பினார். சவுல், இந்த இயேசுவை அழிக்கும் உபத்திரவத்துடனான கடுஞ்சினத்துடன் எதிர்க்க வேண்டும் என்று நினைத்தார். இயேசுவைப் பின்பற்றியவர்கள் எவரொருவரையும், சவுல் சந்தேகத்திற்கிடமின்றி தமது எதிரி என்றே கருதினார். மனமிரக்கமற்ற வலிமையுடனும், தீவிரமான தீர்மானத்துடனும் அவர், கிறிஸ்துவின் சபையை ஒரு முடிவுக்குக் கொண்டு வரச் செயல்பட்டார்.

சபையைத் துன்பப்படுத்துவதில் அவர் முனைப்புடன் செயல் பட்டுக் கொண்டிருந்தபோது, பிரதான ஆசாரியரின் ஆதரவை நாடினார் (அப். 9:1, 2). அவர் விரும்பியபடியான அதிகாரம் கிடைத்தபோது, தனது திட்டத்தைச் செயல்படுத்துவதற்காகத் தமஸ்குப் பட்டணம் நோக்கிச் சென்றார். அவர் தமஸ்குவுக்குச் செல்லும் வழியில், மத்தியான வேளையிலே, சூரிய வெளிச்சத்தைக் காட்டிலும் பிரகாசமான ஒளியிலே, கர்த்தராகிய இயேசு அவருக்குத் தரிசனமானார். கர்த்தருடைய பிரசன்னத்தின் வெளிச்சத்தினால்

*கண்களை இழந்த சவுல், தரையில் விழுந்தார். தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவே அவருடன் பேசுகின்றார் என்ற சத்தியத்தைப் பூமியை அசைக்கும் உறுதிப்பாடுடன் அவர் உணர்ந்துபோது, ஆழ்ந்த மனவருத்தம் மற்றும் பச்சாதாபத்துடன் சவுல், "ஆண்டவரே, நான் என்ன செய்ய வேண்டும்?" (அப். 22:10) என்று கேட்டார். அவர் தமஸ்குவுக்குச் செல்லும்படியும், என்ன செய்ய வேண்டும் என்பது அங்கு அவருக்குச் சொல்லப்படும் என்றும் கூறப்பட்டது (அப். 9:6). அவர் அங்கு சென்ற பொழுது அனனியா வினால் பதிலானது கொண்டு வரப்படும் வரையிலும் மூன்று நாட்கள் உபவாசித்து, ஜெபம் செய்து கொண்டு காத்திருந்தார்.*

*சவுல் மனந்திரும்பினார். அவர் தமது வாழ்க்கையின் வழிமுறைபற்றிய தமது சித்தத்தில் தீர்மானமுள்ள ஒரு மாற்றத்தை மேற்கொண்டார். அவரது வாழ்க்கையானது யூத மார்க்கத்திற்கும், கிறிஸ்துவின் சபையாரை உபத்திரவப்படுத்துவதற்கும் அர்ப்பணிக்கப் பட்டிருந்தது; தமஸ்குவுக்குச் செல்லும் சாலையில் அவர் மனந் திரும்பிய போது, அவரது வாழ்வானது முற்றிலும் புதிய திசை யொன்றை நோக்கியது. அவர் தமது பழைய வாழ்விலிருந்து மாறி தமது ஆளுமைத் தன்மை, அறிவுடைமை, உணர்வுகள், மற்றும் மனசாட்சி ஆகியவற்றில் புரட்சிகரமான மாறுதல் ஏற்படுத்தும் சித்தமுடைய வரானார். பின்னாளில் அவர், "எனக்கு லாபமாயிருந்தவைகளெவை களோ அவைகளைக் கிறிஸ்துவுக்காக நஷ்டமென்று எண்ணினேன்" (பிலி. 3:7) என்று கூறினார்.*

*சவுலைப் போன்றே, கிறிஸ்தவர்கள் தங்கள் பாவத்திலிருந்து மனந்திரும்பியவர்களாய் இருக்கின்றார்கள். தேவனுடைய மக்களின் வாழ்க்கை முறையானது பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றை யும் விட்டு விலகுவதாக இருக்கின்றது (1 தெச. 5:22), அது பிரபஞ்சத் திற்கு ஒத்த வேஷம் தரியாததாக (ரோமர் 12:2), தீமையை நன்மையினாலே வெல்லுகிறதாக (ரோமர் 12:21) மற்றும் நல்நடக்கையினாலே தங்களுக்கெதிராக எழுப்பப்படும் எல்லா விதமான பொய்க் குற்றச்சாட்டுகளையும் அமைதிப்படுத்துவதாக (1 பேது. 2:12) இருக்கின்றது.*

## பாவத்திலிருந்து கிறிஸ்துவிடம் திரும்புதல்

*இரண்டாவதாக, மனந்திரும்புதல் என்பது கிறிஸ்துவிடம் திரும்புவதாக இருக்கின்றது. இது தீமைக்கெதிரான பதில்செயலாக*

மட்டும் இருந்துவிடாமல், கிறிஸ்துவுக்கு நேர்மறையான பதில்செயலாகவும் இருக்கின்றது.

தெசலோனிக்கேயர்கள் "ஜீவனுள்ள மெய்யான தேவனுக்கு ஊழியஞ் செய்வதற்கு விக்கிரகங்களை விட்டு தேவனிடத்திற்கு மனந்திரும்பினதால்" (1 தெச. 1:9) பவுல் அவர்களைப் பாராட்டினார். ஒருவர் பாவத்திலிருந்து மனந்திரும்பியிருந்தாலும், அவர் தேவனிடத்திற்குத் திரும்பாதவராயிருந்தால், புதிய ஏற்பாட்டில் இந்தச் சொற்றொடருக்குத் தரப்படும் முழுமையான விளக்கத்தின்படி, அவர் மனந்திரும்பாதவராகவே இருக்கின்றார்.

புதிய ஏற்பாடானது அதன் போதனையில் கிறிஸ்துவை உயர்த்துவதையே முக்கியமான கருத்தாகக் கொண்டுள்ளது. ஏவப்பட்ட எல்லா மனிதர்களும் இதே வகையாகவே பிரசங்கித்தார்கள் என்பதற்கு சமாரியாவில் பிலிப்புவின் பிரசங்கத்தைப் பற்றிய லூக்காவின் விளக்கம் ஒரு எடுத்துக்காட்டாகவே இருக்கின்றது: "அப்பொழுது பிலிப்பென்பவன் சமாரியாவிலுள்ள ஒரு பட்டணத்திற்குப் போய், அங்குள்ளவர்களுக்குக் கிறிஸ்துவைக் குறித்துப் பிரசங்கித்தான்" (அப். 8:5). இவ்வகையான பிரசங்கத்திற்கு பதில்செயல் செய்யும் மக்கள் தங்கள் பாவங்களைக் கைவிட்டு விட்டு, சுவிசேஷச் செய்திக்கு இணங்குவதன் மூலம் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டார்கள். எபேசுவில் பவுல் பிரசங்கித்த பிறகு, மனந்திரும்புதலின் இவ்விரண்டு பகுதிகளும் வெளிப்படையாய்க் காணப்பட்டன.

> *அவர்களெல்லாரும் பயமடைந்தார்கள்; கர்த்தராகிய இயேசுவின் நாமம் மகிமைப்பட்டது. விசுவாசித்தவர்களில் அநேகர் வந்து, தங்கள் செய்கைகளை வெளிப்படுத்தி அறிக்கையிட்டார்கள். மாயவித்தைக்காரராயிருந்த அநேகர் தங்கள் புஸ்தகங்களைக் கொண்டு வந்து, எல்லாருக்குமுன்பாகச் சுட்டெரித்தார்கள் (அப். 19:17ஆ-19அ).*

என்று லூக்கா, கூறினார். மனந்திரும்பிய எபேசியர்கள் கிறிஸ்துவை ஒப்புக் கொண்டு, தங்கள் பாவச் செயல்களைக் கைவிட்டார்கள்.

சவுலின் மனந்திரும்புதலானது பாவத்திலிருந்து திரும்புவதாகவும், கிறிஸ்துவை நோக்கித் திரும்புவதாகவும் இருந்தது. அவர் தமஸ்குவை நோக்கிப் பயணம் செல்லுகையில், கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தும் வழியில் இருந்தார். மோசேயின் பிரமாணத்தின் கீழ் இருந்த அவர்

ஒழுக்க ரீதியான மற்றும் சடங்காச்சார ரீதியான குற்றங்களிலிருந்து விடுதலையானவராகவே இருந்தார். எந்த வகையிலும் அவர் துன்மார்க்கமான ஊதாரியைப் போலிருந்ததில்லை. ஆகவே அவரது மனந்திரும்புதலானது, தேவனைப் பிரியப்படுத்துவதற்கான அவரது முக்கிய விருப்பத்தை எந்த வகையிலும் பாதிக்கவில்லை; அவர் தம் இளவயதிலிருந்தே இந்த விருப்பத்தால் உந்தப்பட்டவராகவும், மோசேயின் பிரமாணத்தைக் கடைப்பிடித்ததன் மூலம் தமது விருப்பத்தை வெளிப்படுத்தியவராகவும் இருந்தார். ஆயினும் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தியது என்ற அவரது செயல் பயங்கரமான பாவமாயிருந்தது. தொடர்ந்து, தேவனுக்கு முன்பாக அவர் மனந்திரும்பியதானது, கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தி, கிறிஸ்துவைக் கண்டனம் செய்வதே தேவனுக்கு உகுந்த ஊழியம் என்ற அவரது முந்தைய நம்பிக்கையைப் புறக்கணித்தல் என்ற விளைவை ஏற்படுத்தியது. அதோடு கூட, கிறிஸ்துவினிடத்திற்குத் திரும்புதலும், அவருடைய சித்தத்திற்குத் தாழ்மையுடன் அடிபணிவதும், அவரைக் கர்த்தர் என்று ஒப்புக் கொள்வதும் தேவையாயிருந்தது.

பவுல் தமது மனந்திரும்புதலைப் பற்றிப் பிலி. 3:8-11ல் தாமே கீழ்க் கண்டவாறு விளக்கப்படுத்தினார்:

> ...என் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணிக் கொண்டிருக்கிறேன். நான் கிறிஸ்துவை ஆதாயப்படுத்திக் கொள்ளும்படிக்கும், நியாயப்பிர மாணத்தினால் வருகிற சுயநீதியை உடையவனாயிராமல், கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினால் வருகிறதும் விசுவாச மூலமாய்த் தேவனால் உண்டாயிருக்கிறதுமான நீதியை உடையவனாயிருந்து, கிறிஸ்துவுக்குள் இருக்கிற வனென்று காணப்படும்படிக்கும், இப்படி நான் அவரையும் அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமை யையும், அவருடைய பாடுகளின் ஐக்கியத்தையும் அறிகிறதற்கும், அவருடைய மரணத்திற்கொப்பான மரணத்திற்குள்ளாகி, எப்படியாயினும் நான் மரித்தோரி லிருந்து உயிரோடெழுந்திருப்பதற்குத் தகுதியாகும் படிக்கும், அவருக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டேன்; குப்பையுமாக எண்ணுகிறேன்.

*ஆகையால், சவுல் பாவத்திலிருந்து கிறிஸ்துவிடம் திரும்பினார். மனந்திரும்புதல் என்பது அவரைப் பொறுத்தமட்டில் எதிர் மறையானதாகவும், நேர்மறையானதாகவும் இருந்தது, ஜீவனுக்கான முந்தைய வழியிலிருந்து திரும்பி, கிறிஸ்துவுக்குள் சிறந்த புதிய ஜீவனை நோக்கித் திரும்புவதாயிருந்தது.*

*மனம் வருந்திய மக்களைக் கொண்ட கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது, கிறிஸ்துவுக்கு ஒப்புக் கொடுத்த வாழ்க்கை வாழ்கின்றது. அதன் உறுப்பினர்கள் கிறிஸ்துவோடு ஒன்றாகின்றார்கள். மனந்திரும்புதலின் மூலமாகக் கிறிஸ்தவர், பரிசுத்தமும் நீதியுமுள்ள ஒரு வாழ்விற்குள் பிரவேசித்திருக்கின்றார். அவர் கிறிஸ்துவுடனே கூடச் சிலுவையில் அறையப்பட்டிருக்கின்றார், அவருடைய மனந்திரும்புதலின் விளைவாகப் புதிய ஜீவன் உண்டாயிருக்கின்றது, அவர் தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கின்றார் (கலா. 2:20). மனம் வருந்திய வகையில் தேவனுடைய மக்களான கிறிஸ்தவர்கள், கிறிஸ்துவின் பெயரைத் தரித்துக் கொண்டு, கிறிஸ்துவோடு ஒருமைப்பாட்டில் வாழ்ந்து, ஆராதனையில் கிறிஸ்துவை உயர்த்தி, மரணத்தில் அல்லது அவரது மறுவருகையில் அவருடன் இன்னும் முழுமையாக இணைவதை எதிர்பார்த்து நீதியில் நிலைநிற்கப் பிரயாசப்படுகின்றார்கள்.*

## பாவத்திலிருந்து ஜீவனுக்காகக் கிறிஸ்துவினிடத்தில் திரும்புதல்

*மூன்றாவதாக, மனந்திரும்புதல் என்பது, பாவத்திலிருந்து ஜீவனுக்காகக் கிறிஸ்துவினிடத்தில் திரும்புவதாய் இருக்கின்றது. இயேசு எவரொருவரையும் மார்க்கரீதியாக சற்று காலம் இருப்பதற்கோ அல்லது துன்மார்க்கத்தில் இருந்து ஒரு குறுகிய காலம் ஓய்ந்திருப்பதற்கோ அழைப்பதில்லை. அவர் முழுமையான ஒப்புக் கொடுத்தலைக் கேட்டார், அதை அவர் தண்ணீரிலும் ஆவியிலும் பிறத்தல் என்றும், மேலிருந்து வரும் பிறப்பு என்றும் குறிப்பிட்டார் (யோவா. 3:5). பவுல் இதனை ஆவிக்குரிய விருத்தசேதனம் என்று ஒப்பிட்டுக் கூறுமளவுக்கு இந்த மறுரூபமானது முற்றானதாகவும், நீடித்ததாகவும் இருக்கின்றது, இது தேவனுடைய கிரியையினால் மாம்ச இச்சைகளை முற்றிலும் நீக்கி விடுதலாக இருக்கின்றது:*

> அல்லாமலும், நீங்கள் கிறிஸ்துவைப் பற்றும் விருத்த சேதனத்தினாலே மாம்சத்திற்குரிய பாவ சரீரத்தைக் களைந்துவிட்டதினால், கையால் செய்யப்படாத விருத்த சேதனத்தை அவருக்குள் பெற்றீர்கள் (கொலோ. 2:11).

மனமாற்றம் என்பது, அருவருப்பான, அழுக்கான, கிழிந்து போன ஆடைகளை மறுபடியும் பயன்படுத்துகின்ற எண்ணமேயில்லாமல் ஒருவர் புறம்பே வீசிவிடுவதைப் போல, பழைய சுபாவத்தைப் புறம்பே தள்ளி விட்டு, புதிய சுபாவத்தை அணிந்து கொள்ளுதலாகும் என்று பவுல் கூறினார் (எபே. 4:24; கொலோ. 3:10).தேவன் நம்மைப் பாவம் மற்றும் மரணத்திலிருந்து தூக்கியெடுத்து, நாம் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே மீட்கப்பட்டபோது நமக்கு கிறிஸ்துவுக்குள் ஜீவனைக் கொடுக்கின்றார் (கொலோ. 2:13).

மனந்திரும்புதல் என்பது தொடர்ந்த ஒப்புக் கொடுத்தலை உள்ளடக்கியதாயிருக்கின்றது. தேவனுக்கான நமது பதில்செயலில், சரீரத்தில் கிரியைகளை நாம் மரணமடையச் செய்ய வேண்டியதா யிருக்கின்றது. அது முதல், கிறிஸ்தவர்களாயிருக்கின்ற நாம் அந்தக் கிரியைகள் மறுபடியும் மேற்கொள்ளப்படாமல் எச்சரிக்கையாயிருக்க வேண்டும். பவுல், "ஆகையால், விபசாரம், அசுத்தம், மோகம், துர்இச்சை, விக்கிரகாராதனையான பொருளாசை ஆகிய இவை களைப் பூமியில் உண்டு பண்ணுகிற உங்கள் அவயவங்களை அழித்துப் போடுங்கள்" (கொலோ. 3:5) என்று கூறினார். மேலும் அவர்,

> இப்பொழுதோ, கோபமும் மூர்க்கமும் பொறாமையும், உங்கள் வாயில் பிறக்கலாகாத தூஷணமும் வம்பு வார்த்தைகளுமாகிய இவைகளையெல்லாம் விட்டு விடுங்கள். ஒருவருக்கொருவர் பொய் சொல்லாதிருங்கள்; பழைய மனுஷனையும் அவன் செய்கைகளையும் களைந்து போட்டு (கொலோ. 3:8, 9).

என்றும் கூறினார். பவுல் ஒரே சமயத்தில் ஒரு விஷயத்தைப் புறம்பே தள்ளுவதை, மரணத்தின் கருத்தை மற்றும் தொடர்ந்து புறம்பே தள்ளிக் கொண்டிருப்பதை, ஒரு தொடர்ச்சியான மனந்திரும்புதலைப் பற்றி எழுதினார்.

சவுலின் மனமாற்றத்தில் காண்பதைக் காட்டிலும் அதிக விளக்கமுள்ள விவரிப்பை நாம் வேறு எதில் காண முடியும்? "தேவன்

*தம்மிடத்தில் முழுமையாய் மனமாறியவர்களுக்கு என்ன செய்ய முடியும் என்பதை நாம் இன்னும் கண்டிருக்கவில்லை" என்று யாரோ ஒருவர் கூறினார். நாம் அதைக் கண்டிருக்கவில்லையென்றாலும், சவுலின் வாழ்க்கையில் அதற்கு நெருங்கிய நிலைக்கு நாம் வந்திருக் கின்றோம். சவுலின் மனமாற்றத்தின் விளைவாக ஏற்பட்ட நல்ல முடிவானது இந்த உலகில் இரண்டாயிரம் ஆண்டுகளாக உணரப் பட்டிருக்கின்றது. கிறிஸ்துவைப் பின்பற்ற வேண்டும் என்ற அவரது முடிவானது இறுதியானதாகவும் மாற்றப்பட முடியாததாகவும் இருந்தது. அவர் தமது வாழ்வைச் சிலுவையினடியில் வைத்து, கிறிஸ்து அவ்வாழ்வில் செய்ய முடியும் ஊழியத்திற்கும் நன்மைக்கும் தம்மை ஒப்புக் கொடுத்தார்.*

*மகா அலெக்சாண்டர் ஒரு மாபெரும் யுத்தத்திற்காகத் தனது படைகளைக் கடற்கரையருகில் கொண்டுவந்த போது, தாங்கள் வந்திறங்கிய கப்பல்களை உடனே தீக்கிரையாக்கும்படி கட்டளை யிட்டதாகக் கூறப்படுகின்றது. பின்வாங்குவதற்கான சாத்தியக் கூறு எதுவும் இருக்கக் கூடாது என்பதில் அலெக்சாண்டர் மிகவும் கவனமா யிருந்தார். அவரும் அவருடைய மனிதர்களும் திரும்பிப் போகக் கூடாதிருந்தது. அவர்களின் எதிர்காலம் யாவும் அவர்களுக்குப் பின்னால் அல்ல, அவர்களுக்கு முன்னாலேயே இருந்தது. சவுலுக்கும் இது போலவே இருந்தது. பின்வாங்குவதற்கான வாய்ப்புக்கள் அல்லது சாத்தியக் கூறுகள் எதையும் அவர் தமது இருதயத்தில் இடமளிக்க வில்லை.*

*தேவனுடைய மக்களான சபையானது, ஒரு ஒப்புக்கொடுத்தலை மேற்கொண்டுள்ளது-மறுரூபமாகுதல், மரணத்திலிருந்து ஜீவனுக்குத் திரும்புதல் என்று பெயரிடுமளவுக்கு அது பலமுள்ளதாயிருக்கின்றது (1 யோவா. 3:14). அவர்கள் கிறிஸ்துவுக்குள் ஜீவனுக்கென்று புதிய மனிதனைத் தரித்துக் கொண்டிருக்கின்றார்கள். இது ஒரே சமயத்தில், கிறிஸ்துவுக்கென்று மனமாறுகையில் நடப்பதாகும், ஆனால் இருதயத்தை சுத்திகரிப்பது என்பது அவர்களுக்குத் தொடர்ந்து நிறைவேற்றும் கடமையாக இருக்கின்றது (ரோமர் 6:2). பழைய மனிதன் மரணத்திற்குள்ளாக்கப் பட்டிருக்கின்றான், ஆனால் அவன் உயிர்த்தெழுவதற்கு வாய்ப்பு எதுவும் கொடுக்கப்பட்டால் அவன் மறுபடியும் உயிரோடு வருவதற்கு முயற்சி செய்வான் (ரோமர் 6:12, 13). கிறிஸ்தவர் மதியீனமாக நடந்து கொள்ளாமல் ஞானத்தோடு நடந்து கொள்வதற்கு மிகவும் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும்.*

(எபே. 5:17). அவர், கனியற்ற அந்தக்காரக் கிரியைகளுக்கு உடன் படாமல், அவைகளைக் கடிந்து கொள்ள வேண்டும் (எபே. 5:11). அவர் மரித்திருக்கிறார், அவரது ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது (கொலோ. 3:3). கிறிஸ்தவர் தம்மை மரித்தோ ரிலிருந்து பிழைத்திருக்கிறவராக தேவனுக்கு ஒப்புக்கொடுத்து, தமது சரீரத்தை நீதிக்கென்று ஒப்புக்கொடுக்கின்றார் (ரோமர் 6:13).

## முடிவுரை

தேவனுக்கு முன்பாகக் கணக்கொப்புவிக்க வேண்டியவர்கள் ஒவ்வொருவரும் மனந்திரும்பி, மனந்திரும்புதலுக்கேற்ற வாழ்க்கை வாழ வேண்டியுள்ளது. மனந்திரும்புதல் என்பது சித்தத்தில் ஏற்படும் ஆழ்ந்த மாற்றமாக, பாவத்திலிருந்து ஜீவனுக்காகக் கிறிஸ்துவிடம் திரும்புவதாக இருக்கின்றது. அது பாவத்தை உணருதல், தேவனுக் கேற்ற துக்கம் மற்றும் தேவனுடைய நற்தன்மை ஆகியவற்றால் கொண்டு வரப்படுவதாக இருக்கின்றது. இது மறுரூபமாகி, கிறிஸ்துவுடன் தேவனுக்குள் மறைந்திருக்கும் ஜீவனையுடைய ஒரு புதிய மனுஷனாவதைக் கொண்டு வருகின்றது.

சபை என்பது இவ்விதமான புதிய மனிதர்களின் சமுதாயமாக இருக்கின்றது. அவர்கள் முழு நிறைவானவர்களல்ல, ஆனால் பரிசுத்தம், தேவபக்தி மற்றும் நீதி ஆகியவற்றில் தொடர்ந்து முயற்சி செய்து கொண்டிருப்பவர்கள் ஆவார்கள். கர்த்தருடைய ஊழியத்தில் கனத்துக்குரிய பாத்திரமாயிருப்பதே அவர்களின் வாழ்வு முழுவதிற்கு மான உறுதிப்பாடாக இருக்கின்றது.

மனந்திரும்புதலுக்காகத் தரப்படும் மூன்று ஊக்குவிப்புகளை வேதவசனங்களில் சுலபமாக அடையாளப்படுத்த முடியும். முதலா வது, தேவ தயவுதான் மனந்திரும்புதலுக்கு வழி நடத்துகின்றது என்று பவுல் கூறினார்: “அல்லது தேவதயவு நீ குணப்படும்படி உன்னை ஏவுகிறதென்று அறியாமல், அவருடைய தயவு பொறுமை நீடிய சாந்தம் இவைகளின் ஐசுவரியத்தை அசட்டை பண்ணுகிறாயோ?” (ரோமர் 2:4). இரண்டாவது, வெகுமதியின் வாக்குத்தத்தத்தைப் பேதுரு குறிப்பிட்டார்: “ஆனபடியினாலே கர்த்தருடைய சந்நிதானத் திலிருந்து இளைப்பாறுதலின் காலங்கள் வரும்படிக்கும், முன்னே குறிக்கப்பட்ட இயேசு கிறிஸ்துவை அவர் உங்களிடத்தில் அனுப் பும்படிக்கும், உங்கள் பாவங்கள் நிவர்த்தி செய்யப்படும் பொருட்டு

*நீங்கள் மனந்திரும்பிக் குணப்படுங்கள்" (அப். 3:19, 20). மூன்றாவது, தண்டனையின் பயங்கரம் பற்றி யோவான் குறிப்பிட்டார்:*

> *அந்நாட்களில் யோவான்ஸ்நானன் யூதேயாவின் வனாந்தரத்தில் வந்து: "மனந்திரும்புங்கள், பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கின்றது என்று பிரசங்கம் பண்ணினான் ... இப்பொழுதே கோடரியானது மரங்களின் வேர் அருகே வைத்திருக்கிறது; ஆகையால் நல்ல கனி கொடாத மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும்" (மத். 3:1-10).*

*மனந்திரும்புதல் மட்டுமே தேவனைப் பிரியப்படுத்துவதாய் இல்லாமல், மனந்திரும்புதலானது நமக்குள் கீழ்ப்படிதலின் ஆவியை உண்டாக்குகின்றது. இப்படிப் பட்ட ஒரு ஆவியானது கிறிஸ்துவுக்குள் வருவதற்குத் தேவன் நியமித்துள்ள கட்டளைகள் எல்லாவற்றிற்கும் கீழ்ப்படியும்படி நம்மை வற்புறுத்துகின்றது. இது ஒருவரது வாழ்க்கையைத் தேவனுடைய சித்தத்தை நோக்கித் திறந்து வைக்கின்றது.*

*பிரதான கட்டளையானது நமது இரட்சகரின் கடைசி வார்த்தைகளல்ல, மாறாக ஆசியாவின் ஏழு சபைகளை மனந்திரும்பும்படி அழைத்த அவரது அழைப்பே அவரின் கடைசி வார்த்தைகளாகும் என்று கூறப்படுகின்றது (வெளி. 1-3). நீங்கள் இன்னமும் மனந்திரும்பி, வருந்துகின்ற மக்களாகத் தேவனிடம் வரவில்லையென்றால், அதைக்காட்டிலும் பெரிய தேவை வேறெதுவும் உங்களுக்கு இல்லை. நீங்கள் ஒரு கிறிஸ்தவராயிருந்தால், கிறிஸ்துவுக்குள் புதிய நபர் என்ற வகையில், நீங்கள் மேற்கொண்ட உறுதிப்பாட்டின்படியாகவே வாழ வேண்டியது உங்கள் கடமையாகும்.*

## பாட வினாக்கள்

*(விடைகள் 322 ம் பக்கங்களில்)*

1. *ஐசுவரியவானின் சிந்தனையை மரணமானது எவ்விதம் மாற்றியது?*
2. *கிறிஸ்தவர்களாகும்படி விரும்பித் தேடும் யாவருக்கும் "மனந்திரும்புதல்" என்பது மூலைக்கல் போன்ற வார்த்தையாகவும், பிரதான நடக்கையாகவும் இருப்பது ஏன்?*

3. *ஒருவர் தாம் பாவம் செய்ததாக வருந்துவதைக் காட்டிலும், மனந்திரும்புதல் என்பது மேலானது ஏன்?*
4. *மனந்திரும்புதலானது,தேவனுக்கேற்ற துக்கம் மட்டுமே அல்ல என்பது ஏனென்று விளக்கவும்.*
5. *சவுலின் மனமாற்றத்தில் மனந்திரும்புதல் எவ்விதம் காணப்படுகின்றது?*
6. *பவுல் தெசலோனிக்கேயரைப் பாராட்டியது ஏன்?*
7. *பாவத்தை அறிக்கையிடுதலைக் காட்டிலும் மனந்திரும்புதல் மேலானது, ஏன்?*
8. *வேதவசனத்தில், மனந்திரும்புதலுக்கான மூன்று ஊக்குவிப்புகள் யாவை?*

## வேதாகமத்தை மேலும் படிப்பதற்கு ஒரு வழிகாட்டி

***யார் மனந்திரும்ப வேண்டும்?*** *- 2 பேது. 3:9; அப். 17:30, 31; லூக். 13:3.*

***மனந்திரும்புதலுக்கான புதிய ஏற்பாட்டின் எடுத்துக்காட்டுகள்*** *- ஊதாரி மகன் (லூக். 15:11-24); சகேயு (லூக். 19:2-8).*

***மனந்திரும்புதலின் கிரயம்*** *- மத். 10:34-39; லூக். 12:51-53.*

***மனமாற்றத்தின் எடுத்துக்காட்டுகள்*** *- அப். 2:36-47; 8:5, 6, 12, 18-22, 26-39; 9:1-18; 10:1-48; 16:13-15, 25-34; 19:1-5.*

***கிறிஸ்தவச் செல்வாக்கு*** *- மத். 5:13-16; 1 கொரி. 15:33.*

***எல்லா மக்களுக்காகவும் இயேசு தமது இரத்தத்தைச் சிந்தினார்*** *- கீழ்ப்படிதலுள்ளவர்களுக்கு இரட்சிப்பானது அளிக்கப்படுகின்றது (எபி. 9:11-14); காளைகள், வெள்ளாட்டுக்கடாக்கள் இவைகளின் இரத்தமானது பாவங்களை நிவிர்த்தி செய்யப் போதுமானவையா யிருக்கவில்லை (எபி. 10:4); அவருடைய இரத்தமே நம்மை மீட்டிருக் கின்றது (1 பேது. 1:18, 19); இயேசுவானவர் ஒவ்வொருவருக்காகவும் மரணத்தை ருசிபார்த்தார் (எபி. 2:9).*

***நாம் சிலுவையைப் பார்க்கும்போது பின்வருவனவற்றைக் கற்றுக் கொள்ளுகின்றோம்*** - *நமக்கு ஒரு இரட்சகர் தேவை (ரோமர் 3:23, 24; 5:12) தேவன் நம்மில் எவ்வளவாய் அன்பு கூர்ந்தார் (யோவா. 3:16); மக்கள் பாவிகளாகயிருந்த போதிலும் கிறிஸ்து அவர்களில் அன்பு கூருகிறார் (ரோமர் 5:8, 9); இரட்சிப்பானது தேவனிடத் திலிருந்து வந்த ஈவாக இருக்கின்றது (எபே. 2:8-10).*

***இயேசுவின் சிலுவை மரணமானது, ஞானஸ்நானத்தின் மூலம் நாம் அவரது இரத்தத்தைச் சந்திக்கும்போது நம்மை இரட்சிக் கின்றது*** - *நாம் ஞானஸ்நானத்திலே அவரோடு கூட அடக்கம் பண்ணப்படுகின்றோம் (ரோமர் 6:3, 4); ஞானஸ்நானம் இரட்சிக் கின்றது (1 பேது. 3:21).*

***நீங்கள் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்த பிறகு எவ்விதத்தில் ஒரு கிறிஸ்தவராக வாழ முடியும்?***

1. *ஆவிக்குரிய வளர்ச்சியில் மாபெரும் உறுதிப்பாட்டுடன் இருத்தல். வளருவதற்கான ஒவ்வொரு முயற்சியையும் மேற்கொள்ளுதல் (2 பேது. 1:1-10). வளரத் திட்டமிடுதல் (பிலி. 3:7-15).*
2. *வேதாகமத்தைப் படித்தல்-வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதித்தல் (2 தீமோ. 2:15). அறிவில் வளருதல் (2 பேது. 3:18). வேதவசனங்களை அன்றாடம் படித்தல் (அப். 17:11). வசனத்தைத் தாழ்மையுடன் ஏற்றுக் கொண்டு, அதற்குக் கீழ்ப்படிதல் (யாக். 1:21-25).*
3. *உங்கள் வாழ்வில் கிறிஸ்தவ கிருபைகளைக் கூட்டி வழங்குதல். விசுவாசம், தைரியம், ஞானம், இச்சையடக்கம், பொறுமை, தேவபக்தி, சகோதர சிநேகம் மற்றும் அன்பு ஆகியவற்றைக் கூட்டி வழங்குதல் (2 பேது. 1:5-7).*
4. *ஜெபிப்பதை ஒழுங்கான வழக்கமாக்கிக் கொள்ளுதல். ஞானத்திற்காக ஜெபித்தல் (யாக். 1:5, 6). இடைவிடாமல் ஜெபித்தல் (1 தெச. 5:17).*
5. *ஆராதிப்பதை (முடிந்தால் மற்ற கிறிஸ்தவர்களுடன் இணைந்து ஆராதிப்பதை) ஒழுங்கான வழக்கமாக்கிக் கொள்ளுதல். சபை கூடிவருதலை விட்டுவிடாதிருத்தல் (எபி. 10:25). உங்கள் பகுதியில் சபையில்லையென்றால், நீங்கள் உங்கள்*

வீட்டிலேயே சபையொன்றைத் தொடங்கலாம். ஆவியிலும் உண்மையிலும் தொழுது கொள்ளுதல் (யோவா. 4:24).

6. *இயேசுவைப் பற்றி மற்றவர்களுக்குக் கூறுதல்.* உங்களால் முடிந்த அளவு ஒவ்வொருவரிடத்திலும் போதியுங்கள் (மத். 28:18-20; மாற். 16:15, 16). இந்தப் புத்தகத்தை உங்கள் நண்பர்களுடன் பகிர்ந்து கொண்டு, அவர்கள் கிறிஸ்தவர்களாவதற்கு உதவுங்கள்.
7. *நற்செயல்கள் செய்தல்.* இயேசுவால் இரட்சிக்கப்பட்டவர்கள் நற்செயல்கள் செய்வதற்கென்றே சிருஷ்டிக்கப்பட்டிருக்கின்றார்கள் (எபே. 2:10).